முருகப்பெருமான் துணை

**மகான் கழற்சிங்கர் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.07.2022, திங்கட்கிழமை

1. தவசியே ஆறுமுக அரங்கா
   தரணியில் வேலவன் வழிபாட்டின்
   அவசியம்தனை மக்களுக்கு உரைத்து
   அருளவந்த அவதார தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் சுபகிருது மிதுனதிங்கள்
   ஆசிபட இருபானேழ்திகதி சோமவாரம்
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 27 நாள், 11.07.2022 திங்கட்கிழமை)
   அருளாசிதனை கழற்சிங்கர் நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மை வழி காட்டும் அரங்கன்
   தானதருமமே மக்களை தேற்றி
   தரணி காக்கும் உயர் மார்க்கம் ஆகும்
4. ஆகவே கலியுக மக்கள்
   அன்னதான சேவை ஆற்றி
   வகைபட தொடர்ந்து செய்து
   வணங்கி ஞானிகளை பின்பற்றி
5. பின்பற்றி சைவநெறி ஏற்று
   பிரணவக்குடிலை அனுகிவர
   இன்பமான வாழ்வும் அமைதியும்
   எந்தவித ஆபத்தும் அனுகாத வண்ணம்
6. வண்ணமுடன் பாதுகாப்பு கூடி
   வளர்ச்சிகளும் மாற்றமும் காண்பர்
   எண்ணம் வழி ஞானிகள் மேலான
   ஈடுபாடு மிகுதி கொண்டுமே
7. கொண்டுமே அனுதினம் பிரம்மவேளை
   குறைவிலா சோதி ஏற்றி
   உண்டான மகான்கள் பேரில்
   உயர்வான செபதப உரு ஏற்ற
8. ஏற்றவே ஆத்ம பலமும்
   இறை அருள் கூடும் திடமும்
   பற்று நீக்கி வாழ உண்டான
   பக்குவமும் நடத்தைகளும் கூடி
9. கூடியே கலியுக மக்களெல்லாம்
   குருவருள் வழி திருவருளை
   தேடியே ஞானிகள் ஆவர்
   தேசிகனார் ஆசிபெற்றநல்

10. நல் சீடர்கள் தொண்டர்களாக
நாடெங்கிலும் ஞானவான்கள்
வல்லமைபட பெருகி வருக
வையகம் ஞானவான்கள் தலைமை

11. தலைமை கொண்ட ஞான ஆட்சி
தடையின்றி கண்டு தேறும்
ஊழலில்லா சமூகம் ஆகும்
உரைத்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–